# பொன் நாணயம்

ஆசிரியர்

மாணிக்க. சிவ-முத்து

ஶ்ரீ க. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,


சென்னை.

பதிப்புரிமை] 1935 [விலை அணா 4

**Reprint : June, 1935.**

*Approved by the Text Book Committee,*
*Vide Fort St. George Gazette, Page 265, dated 14th April 1931.*

THE KESARI PRINTING WORKS, MADRAS.



# பொன் நாணயம்

ஓர் ஊரில் ஒரு கிழவர் இருந்தார். அவர் மிகவும் பணக்காரர். அவர் சிறு பிள்ளைகளிடம் மிகவும் அன்பாய் இருப்பார். ஆதலால், அங்கே உள்ள சிறுவர்கள் அடிக்கடி அவரிடம் வருவார்கள்.

அந்தக் கிழவரின் பெயர் குப்பு-சாமிப் பிள்ளை. அவர் கதை சொல்லு-வதில் கெட்டிக்காரர். பிள்ளைகளுக்குக் கதையின்மேல் மிகவும் ஆசை அல்-லவா? ஆதலால் அவர்கள் கதை சொல்-லும்படி அடிக்கடி அவரை வேண்டு-வார்கள்.

ஒருநாள் இரவு ஏழு மணி இருக்கும்; அப்போது நிலவு பால் போல் அழகாகக் காய்ந்தது. அக் கிழவர் ஒரு திண்ணையின் மீது உட்-கார்ந்து இருந்தார். சிறுவர் சிலர் அவரைச் சூழ்ந்து இருந்தனர்.

அன்று சனிக்கிழமை; ஆதலால், அவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை. தங்கள் பழைய பாடங்களை அவர்கள் சீக்கிரத்திலே படித்துவிட்டனர்; கதை கேட்கக் கிழவரிடம் ஆவலோடு வந்-திருந்தனர்.

அப்போது, அந்தக் கிழவர் ஏதோ யோசித்துக் கொண்டு இருந்-தார். ஆதலால் அச்சிறுவர்கள் சிறிது நேரம் சும்மா இருந்தார்கள்; பிறகு மெதுவாகப் பேச ஆரம்பித்தார்கள்:

"தாதா—ஏதோ யோசிக்கிறார்," என்றான் ஒரு சிறுவன்.

"ஆம்; அவர் நமக்குக் கதை சொல்லவே யோசித்துக் கொண்டு இருக்-கிறார்," என்றான் மற்றொரு சிறுவன்.

அக் கிழவர் அப்போதும் பேசா-மலே இருந்தார்; பிறகு பெரு மூச்சு விட்டுக்கொண்டு, "ஆ! நான் சிறு வயதில் என்ன பாடு பட்டேன்!" என்றார்.

"தாதா - தாதா, அது என்ன? அதை எங்களுக்குச் சொல்லுங்கள்,"

என்று அச் சிறுவர் ஆசையோடு கேட்டனர்.

" நல்லது, அவ்விதமே சொல்லு-கிறேன்," என்று சொல்லிக்கொண்டே அக் கிழவர் தம் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டு தம் கதையைச் சொல்ல ஆரம்பித்தார் :


2

" பிள்ளைகளே, நான் ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தவன். ஆனாலும் நான் மிகவும் அருமையாகவே வளர்ந்தேன். ஏன் என்றால் எனக்கு முன் இருவர் பிறந்து இறந்து விட்டனர். பிறகு நெடுநாள் சென்று நான் பிறந்-தேன். ஆதலால், நான் பிறந்ததும் என்னைக் குப்பையிற் புரட்டி எனக்குக் குப்புசாமி என்று பெயரிட்டார்கள்.

எனக்கு ஐந்து வயது ஆயிற்று. அப்போது என் தந்தை என்னை ஒரு

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் விட்டார். நான் ஏழு வயது வரையில் அங்கே படித்தேன்.

ஒரு நாள் என் தந்தை ஏழ்தா நோயினால் இறந்து விட்டார். பிறகு என் தாயாரும் அதே வருத்தத்தால் அடுத்த வருஷமே இறந்து விட்டார். ஆதலால், நான் ஒரு பணக்காரரிடம் வேலைக்குச் சென்றேன். அவர் பெயர்



அருணாசல முதலியார். அவருக்கு நிலங்கள் மிகுதியும் இருந்தன. வேலை யாட்களும் பலர் இருந்தனர். நான் காலையில் எழுந்து மாடுகளை மந்தை வெளிக்கு ஓட்டுவேன்; பிறகு வேலை யாட்களோடு வயலுக்குச் சென்று வேலை செய்வேன்.

என் எசமானர் எனக்கு வேளைக் குச் சோறு போடுவார். சில சமயங் களில் நான் கூழ் குடிப்பதும் உண்டு. பெரும் பொங்கல், தீபாவலி முதலிய நாட்களில் அவர் எனக்கு இரண்டு துணிகள் வாங்கித் தருவார்.

என் எசமானர், எனக்கு இவை களைத் தவிர வேறு பணம் கொடுப்ப தில்லை. சில சமயங்களில் எனக்கு எவரேனும் தம்பிடி அல்லது காலணா கொடுப்பர். அப்போது நான் அந்தக் கடையிலே கொடுத்து ஏதேனும் வாங்

கித் தின்பேன். அந்தச் சிறு வயதில் எனக்கு வெள்ளி நாணயங்களின்மேல் மிகவும் ஆசை. ஆனால் அதை எனக்கு ஒருவரும் கொடுத்ததே இல்லை.

3

"ஒரு நாள் நான் அதிகாலையில் மாடுகளை மந்தை வெளிக்கு ஓட்டிச் சென்றேன். அப்போது தரையின் மேல் ஏதோ ஒன்று பள பளப்புடன்



இருந்தது. ஆதலால், நான் அதை ஆசையோடு விரைந்து எடுத்தேன். பிள்ளைகளே, அது என்ன என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அது ஒரு பொன் நாணயம். அதை நான் அது-வரையில் பார்த்ததே இல்லை. ஆயி-னும், அது ஒரு நாணயமே என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் உண்டாக-வில்லை. ஏன் என்றால், அதில் ஒரு பக்கம் நமது இராஜாவின் தலை இருந்-தது. மற்றொரு பக்கம் எழுத்துக்கள் சில இருந்தன. அது காலணாவைவிடச் சிறியதாக இருந்தது; ஆனால், கன-மாக இருந்தது. மஞ்சளாகவும், பள-பளப்பாகவும் இருந்ததால் அது ஒரு பொன் நாணயமே என்று நான் நிச்சயமாக நம்பினேன்.

பிள்ளைகளே, நான் அந்த நாண-யத்தைக் கண்டதும்—ஆ! என்ன சந்தோஷம் அடைந்தேன்! நான் அதைக் கையில் வைத்து மூடிக்-கொண்டு கூத்தாடினேன்; உயரத்தில் போட்டுப் போட்டுப் பிடித்தேன்; கல்-லின்மேல் போட்டுத் தட்டிப் பார்த்தேன்; கையில் வைத்துக்கொண்டு அழகு பார்த்-தேன்; கண்களில் ஒற்றிக்கொண்டேன். அதற்கு நான் முத்தமும் பல கொடுத்-தேன்.

பிறகு எனக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அது என்னவென்றால் என் பொன் நாணயத்தை எவரேனும் பார்த்துவிட்டனரோ என்பதே. ஆத-லால், நான் அப்போதே அச்சத்தோடு நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்தேன். என் நல்ல காலம்! அப்போது அங்கே

ஒருவரும் இல்லை. ஆதலால் நான் அந்தப் பொன் நாணயத்தை என் கையில் வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டே மாடுகளை மேய்த்தேன்.

அந்த நாணயத்தைக் கொண்டு என்ன என்ன பொருள்கள் வாங்கலாம் என்று நான் நெடு நேரம் யோசித்தேன். எனக்கு அப் பொன் நாணயத்தின் மதிப்பு இவ்வளவுதான்என்றுதெரியாது அல்லவா ? ஆதலால் நான் அப்போது ஒரு முடிவிற்கும் வரவில்லை.

பிறகு வீடு திரும்பும் சமயம் ஆயிற்று. ஆதலால், நான் மாடுகளைத் தேடினேன். அவை அப்போது மூலைக்கு ஒன்றாக மிகத் தொலைவில் மேய்ந்துகொண்டு இருந்தன. நான் ஓடிச்-

சென்று அவைகளை ஒன்ருகச் சேர்ப்ப-
தற்கு ஆரம்பித்தேன்.



4

"வீடு திரும்புவதற்கு எனக்கு நெடு நேரம் பிடித்தது. ஏன் என்ருல்

நான் வழிமுழுதும் நின்று நின்று அப் பொன் நாணயத்தைப் பார்ப்பதும், மகிழ்வதுமாகவே இருந்தேன் நான் வீட்டுக்கு அருகே வந்ததும் 'ஆ! என் எசமானர் கோபிப்பாரே! என எண்ணினேன். ஆதலால், நான் இரண்டொரு அடி வேகமாக வைத்து நடந்தேன்; பிறகு அசைவற்று ஓர் இடத்தில் நின்றுவிட்டேன். ஏன் என்றால், என் கையில் பொன் நாணயம் இருந்தது அல்லவா? அதை நான் எங்கே வைப்பது? என எண்ணினேன்.

அந்தப் பொன் நாணயத்தை ஒளித்து வைக்க எனக்குத் தகுந்த இடம் எங்கும் அகப்படவில்லை. பூமியில் புதைத்து வைக்கலாம் என்று நான் நினைத்தேன்; ஆனால் அதை

விட்டுப் பிரிய மனமில்லாமல் வருந்தினேன். ஆதலால், நான் அதனை மடியில் வைத்துச் செருகினேன்; பிறகு காதில் செருக முயன்றேன்; தாடைக்குள் வைத்து அமுக்கியும் பார்த்தேன். எதுவும் தகுந்த இடங்களாகத் தோன்றவில்லை. முடிவில் நான் அதனை என் துணியிலே வைத்து அழுத்தமாய் முடியிட்டேன். ஆனால் அதன் அழகைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்கில்லையே என்ற வருத்தம் மட்டும் மிகுதியும் இருந்தது. ஆதலால், நான் வீட்டுக்குள் நுழையும் வரையில் அந்த முடிப்பைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டே சென்றேன்.

நான் இவ்விதம் என் எசமானர் வீட்டை அடைந்து மாடுகளைத் தொழு-

வத்தில் கட்டினேன். பிறகு நான் அங்-
கேயே சிறிது நின்று அம் முடிப்பை
அவிழ்த்துப் பார்த்து மகிழ்ந்தேன்.
அப்போது என் எசமானர் என்னைக்
கூப்பிடும் குரல் கேட்டது. ஆ! அச்-
சமயம் நான் மிகவும் பயந்து விட்டேன்.



அவர் என்னைக் கண்டதும், 'அடே குப்பா, எங்கே அந்தப் பொன் நாண்-யம்? கொண்டுவா — இங்கே,' என்று கேட்பார் என நான் எண்ணினேன். அப்போது நான், 'எசமானரே, என்னை மன்னிக்கவேண்டும். இதோ அந்தப் பொன் நாணயம்,' என்று சொல்லிக் கொடுத்துவிடத் தயாராய் இருந்தேன்.

பிள்ளைகளே, நான் அவர் அருகே சென்றேன். அவர் என்னைக் கண்ட-தும், 'அடே குப்பா, கூழ் குடித்-தனையா?' என்றார்.

நான் உடனே, 'இன்னும் இல்லை,' என்று அச்சத்தோடு கூறினேன்.

'அடே முட்டாளே, இவ்வளவு நேரமாகியும் நீ என்ன செய்கின்றாய்?

உடனே சென்று சாப்பிடு,' என்று சொல்லி அவர் வெளியே சென்றார்.

இதைக் கேட்டதும் எனக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகி விட்டது. அவர், என் பொன் நாணயத்தைத் எங்கே கேட்கின்றாரோ என்று நான் பயந்து இருந்தேன். ஆனால் அவர் அதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆதலால் நான் மிகவும் சந்தோஷத்தோடு வீட்டில் உள்ளே சென்றேன்.

## 5

"ஒரு வேலைக்காரன் எனக்கு உணவு கொண்டு வந்தான். அப்போது எனக்குச் சாப்பாட்டின் மீது விருப்பம் செல்லவே இல்லை. என் எண்ணம் அந்தப் பொன் நாணயத்தின் மீதே இருந்தது. நான் அங்கே ஒருவரோடும் பேச-

வில்லை. அவர்களோடு கூடி இருக்கவும் நான் விரும்பவில்லை. எனக்கு அங்கே உள்ள எல்லோர் மீதும் சந்தேகம் தோன்றிற்று. என்னைப் பார்க்கின்றவர்கள் எல்லோரும் என் பொன் நாணயத்தைப் பார்த்துவிட்டார்கள் என்றே நான் எண்ணினேன். ஆதலால், சாப்பாடு முடிந்ததும் நான் தனியே சிறிது தூரம் நடந்து சென்றேன்.


என் வேலை முடிந்ததும், அங்கு உள்ள சிறுவர்களோடு சிறிது நேரம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு இருப்பேன்; அல்லது அவர்கள் விளையாடுவதை வேடிக்கையாகப் பார்ப்பேன். ஆனால், நான் அன்று அவ்விதம் செய்ய எண்ணவில்லை. நான் தனிமையாகவே இருக்க விரும்பினேன். அப்போது என் மனத்தில் ஒருவித

அச்சமே குடிகொண்டிருந்தது. என் மார்பு 'படபட' வென்று அடித்தது. வழியில் செல்வோரைப் பார்க்கும் பொழுது என் கால்கள் நடுங்க ஆரம்பித்தன.

பிள்ளைகளே, அவ்வளவு துன்பங்களுக்கும் காரணம் என்ன? அந்தப் பொன் நாணயமே — அல்லவா? நான் அதனை அப்போதே கீழே எறிந்து விடலாம் என்று எண்ணினேன். ஆனால், அவ்விதம் செய்யவும் எனக்குச் சிறிதும் மனம் வரவில்லை. ஆதலால் நான்சிறிது நேரம் ஏதேதோ யோசித்தேன் :

'சென்ற வாரம் எனக்கு ஒரு காலணா அகப்பட்டதே — ஆ! அதை நான் எவ்வளவு ஆசையுடன் எடுத்தேன்! என்னுடன் இருந்த பிள்ளைகளும்

அதைப் பார்த்தனர். அப்போது எனக்குச் சிறிதும் அச்சம் தோன்ற-வில்லை. அவர்களும் — அப்பா, நீ மிகவும் அதிர்ஷ்டசாலி — என்று சொல்லி என்-னைப் புகழ்ந்தனர். நானும் அதை ஆனைபோடி கடையில் கொடுத்து எனக்கு விருப்பமானதை வாங்கித் தின்றேன் அல்லவா! இந்தப் பொன் நாணயம் மட்டும் ஏன் எனக்கு இவ்-



வள்வு அச்சத்தை உண்டாக்குகிறது? ஆதலால் இது எனக்கு வேண்டாம், என்று சொல்லிக் கொண்டே அதைத் தரையில் போட்டேன். அப்போது அது 'பள-பள' வென்று மின்னிக் கொண்டு கீழே விழுந்தது. அன்றியும் ஒரு வண்டி வரும் சப்தமும் எனக்குக் கேட்டது. நான் உடனே அதை அவசரத்துடன் எடுத்துத் துணியில் நன்ருக முடிந்துகொண்டேன்.

## 6

"சிறிது நேரம் சென்று நான் வீட்டை அடைந்தேன். அப்போது விளக்கு வைத்து நெடுநேரம் ஆகி விட்டது. என் எசமானர் கோபிப்-பார் அல்லவா? ஆதலால், நான் தலை குனிந்துகொண்டு மெதுவாக உள்ளே சென்றேன். அப்போது

அங்கே உள்ள ஓர் அறையில் யாரோ ஒருவர் என் எசமானருடன் பேசும் குரல் கேட்டது. மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் அல்லவா?



அங்கே பேசுவது யார் என்று நான் ஆலோசித்தேன்; பிறகு மெதுவாகச் சிறிது எட்டிப் பார்த்தேன். ஆ! நான்

என்ன சொல்லுவேன்! ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் என் எஜமானரோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தான். அப்-போது நான் பட்டபாடு தெய்வத்துக்குத் தான் தெரியும். நான் உடனே ஒரே ஓட்டமாக அவ்வீட்டை விட்டு வெளியே ஓடினேன்; பிறகு அருகே இருந்த ஒரு புதலுக்குள் போய் ஒளிந்துகொண்-டேன்.

பிள்ளைகளே, நான் அந்தப் புத-லுக்குள் நெடுநேரம் ஒளிந்துகொண்-டிருந்தேன். அப்போது, நான் என்-னென்ன எண்ணினேன் என்பதை இப்-போது என்னால் சொல்ல முடியாது.

'ஆ தெய்வமே! என்னை இப்-படியும் ஆசை காட்டி மோசம் செய்ய-லாமா? நீ எனக்கு ஏன் இந்தப் பாழும் பொன் நாணயத்தைக் கொடுத்தாய்?

நான் இதற்குள் ஏதேதோ எண்ணி மகிழ்ந்தேனே! அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் இதை எப்படியோ தெரிந்துகொண்டானே!—ஆ! அந்தப் பாவி, என்னை என்னென்ன பாடு படுத்துவானோ!—ஐயோ! நான் என்ன செய்வேன்! கடவுளே, நீயே என்னைக் காப்பாற்றவேண்டும்'.

இவ்விதம் நான் ஏதேதோ என் மனதிற்குள் சொல்லிக்கொண்டேன். அப்போது என் எசமானரும், அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனும் வெளியே வந்தார்கள். அவர்கள் இருவரும் அங்கேயும் சிறிது நேரம் ஏதோ இரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். பிறகு அவன், அவரை விட்டுப் பிரியும்போது, 'ஐயா, நான் சொல்லியது தங்கள் கவனத்தில் இருக்கட்டும்,' என்றான். அதற்கு என் எசமானர்,

ஆம், அப்படியே செய்கிறேன், என்றார்.

## 7

"பிள்ளைகளே, அப்போது என் மனம் எப்படித் துடித்திருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்! போலீஸ் உத்தியோகஸ்தன் போன பிறகும் நான் அவ்விடத்தை விட்டு எழுந்திருக்கவே இல்லை. பிறகு என் எசமானர், 'அடே குப்பா- குப்பா!' என்று கூப்பிடும் குரல் கேட்டது. ஆதலால், நான் நடுக்கத்தோடு மெதுவாக எழுந்து சென்றேன். என் எசமானர் மிகவும் கோபத்துடன் என்னைப் பார்த்தார்.

ஆ! அப்பொழுது நான் மிகவும் பயந்துவிட்டேன். அவர் என்னை அந்தப் போலீஸ் உத்தியோகஸ்க-

ணிடம் பிடித்துக் கொடுக்கப் போகிறார் என்றே எண்ணினேன். அச்சமயம் என்றால் பேசுதற்கும் முடியவில்லை. என் கைகளும் கால்களும் நடுங்கின. நான் மெதுவாக அடிமேல் அடி வைத்து அவரிடம் சென்றேன். அப்போது அவர், 'அடே மடையா, முட்டாளே, நீ இவ்வளவு நேரம் எங்குச் சென்றிருந்தாய்! விளக்கு வைத்தும் வீட்டுக்கு வர வேண்டாமா! சோம்பேறிப்பயலே, இனி இவ்விதம் வருவாயானால் நன்றாக உதை படுவாய்; விரைந்து உள்ளே செல் — தடிப்பயலே,' என்றார்.

நான் அவருக்கு யாதும் பதில் கூறவில்லை. அவர், என்மேல் கோபித்துக் கொண்டதற்காகவும் நான் சிறிதும் வருந்தவில்லை. அவர், 'அந்தப் பொன் நாணயத்தைக் கொடு' என்றுவது,

'சிறைச்சாலைக்கு வா' என்றாவது சொல்லாமல் இருந்ததே எனக்குப் போதும் அல்லவா! ஆதலால், நான் மிக்க ஆனந்தத்தோடு வீட்டிற்குச் சென்றேன்.

நான் வீட்டிற்குள் சென்றதும் வழக்கம் போல் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்து முடித்தேன்; பிறகு உறங்கச் சென்றேன். ஆனால், எனக்குச் சிறிதும் தூக்கம் வரவில்லை. ஆதலால், நான் அப்பொன் நாணயத்தை என்ன செய்யலாம் என்று படுத்துக் கொண்டே யோசித்தேன். அப்போது மணி பத்து அடித்தது. நான் மெதுவாக படுக்கை விட்டு எழுந்தேன்; பிறகு நான்கு புறமும் சுற்றிப் பார்த்தேன். அச்சமயம் அங்கு உள்ள எல்லோரும் படுத்துத் தூங்கிக்கொண்டு இருந்தார்-

கள். ஆதலால், நான் உடனே ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டேன். பிறகு நான் அப்பொன் நாணயத்தை மெதுவாக எடுத்தேன்; விளக்கு வெளிச்சத்தில் திருப்பித் திருப்பிப் பார்த்தேன்.

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். அப்போதுதான் எனக்குச் சிறிது தூக்கம் வருவதுபோல் இருந்தது. ஆதலால், நான் அந்த நாணயத்தை அழுத்தமாகத் துணியில் முடிபோட்டுக்கொண்டு சிறிது கண்மூடினேன். அப்போது எனக்கு அருகிலே படுத்திருந்த வேலையாட்களில் ஒருவன் கையானது என்மேல் பட்டது. நான் அந்த நிமிஷமே அச்சத்தோடு எழுந்து மறுபடியும் மூலையில் போய் உட்கார்ந்தேன். நான் தூங்கினால் என் பொன் நாண-

யத்தை அவன் எடுத்துக் கொள்வானே என்ற அச்சமே என்னை அவ்வாறு செய்தது.



**8**

"பிள்ளைகளே, நான், நெடுநேரம் வரையில் இமை கொட்டாமல் விழித்துக்கொண்டே அங்கே உட்கார்ந்திருந்தேன். ஆனால் அதிகாலையில் எவ்விதமோ என்னை யறியாமல் தூக்-

கம் வந்து விட்டது. ஆதலால், நான் உட்கார்ந்தபடியே தூங்கி விழுந்தேன். அவ்விதம் தூங்கும்போது நான் ஒரு சிறு கனவு கண்டேன். அது என்னவென்றால்—அதையும் சொல்லுகிறேன்—கேளுங்கள்

நான் அந்தப் பொன் நாணயத்தைக் கடைக்காரனிடம் கொடுத்தேன்—கடைக்காரன் என்மேல் சந்தேகம் கொண்டான்—பிறகு தாணுக்காரனிடம் ஏதேதோ சொன்னான்—தாணுக்காரன் என்னைப் பிடித்துக்கொண்டான்—நான் அவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடினேன்—உடனே, என் எசமானர் கோபத்துடன், 'அவனைப் பிடியுங்கள்—பிடியுங்கள்,' என்று கத்தினார்—அப்போது நான் 'ஓ' வென்று அழ ஆரம்பித்தேன்.

இவ்விதம் நான கனவில் அழுது
கொண்டு இருக்கையில் என் முதுகில்
'பளீர்' என்று ஓர் அறை விழுந்தது.
நான், 'இல்லை ஐயா—இல்லை ஐயா,'
என்று கத்திக்கொண்டே மெதுவாகக்
கண் திறந்து பார்த்தேன். எனக்கு
எதிரிலே சமையற்காரன் பனைமரம்-
போல் நிற்கக் கண்டேன்.

'அடே குப்பா, என்ன? ஓவென்று
கத்தினாய்! தடிப்பயலே,' என்றான்
சமையற்காரன்.

'ஒன்றும் இல்லை; உம்—கனவு—
கண்டேன்.'

'சரி—அதற்காக நீ ஏன் குழந்தை
போல் அழவேண்டும்?'

'உம்—பயந்தேன்,' என்று சொல்-
லிக்கொண்டு நான் என் தலையைச்
சொறிய ஆரம்பித்தேன்.

‘அப்படியா? அது கிடக்கிறது! மணி ஐந்து ஆயிற்று; எழுந்து உன் வேலையைப் பார். எவ்வளவு நேரம் தூங்குவது? — மூதேவி!’ என்று சொல்லிக் கொண்டே அவன் வெளியே சென்றான்.

அவன் சென்றதும் நான் என் பண முடிப்பைத் தொட்டுப் பார்த்தேன். அது பத்திரமாக இருப்பது கண்டு சந்தோஷம் அடைந்தேன்.

## 9

“பிள்ளைகளே, நான் உடனே எழுந்து வீட்டு வேலைகளைக் கவனித்தேன். நான் அவ்வாறு வேலை செய்யும்போது அங்கு உள்ளோரிடம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் இருப்பது வழக்கம். அன்று நான் அவ்விதம் இல்லாமையால் எல்-

லோரும், ‘குப்பா, என்ன? உனக்கு உடம்பு சுகம் இல்லையா!’ என்று கேட்க ஆரம்பித்தார்கள்.

நான் ‘ஆம்’ என்று சொல்லித் தலை குனிந்து என் வேலையைச் செய்தேன்.

அன்று எனக்கு உடம்பு மிகவும் இளைத்திருந்தது. ஒன்றிலும் விருப்பம் செல்லவில்லை. என் மார்பு ‘படபட’ வென்று அடித்துக் கொண்டு இருந்தது. நான் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டதாகவே எண்ணினேன். ஆனால், அது என்ன குற்றம் என்று எனக்குச் சிறிதும் தெரியவில்லை. என்றாலும், இவ்வளவு துன்பத்திற்கும் அந்தப் பொன் நாணயமே காரணம் என்பதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். ஆனால் அதை என்ன செய்வது என்று யோசித்தேன். யாருக்-

கேனும் அதைக் கொடுத்து விடலாமா என எண்ணினேன். அவ்விதம் செய்யவும் மனம் வரவில்லை. அதை என்னிடமே வைத்துக் கொள்ளவும் நான் விரும்பவில்லை.

பிறகு நான் வீட்டைப் பெருக்கத் தொடங்கினேன். அப்போது; என் எசமானர் ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவருக்குச் சிறிது தூரத்திலே கணக்கப்பிள்ளை அமர்ந்திருந்தார்.

சிறிது நேரங் கழித்துக் கணக்கப் பிள்ளை, என் எசமானரைப் பார்த்து, 'நான் நேற்றுப் போக்கடித்து விட்டேனே! அது தங்களுக்கும் தெரிந்திருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்,' என்றார்.

'என்ன ? — போக்கடித்து விட்டீரா!' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் என் எசமானர்.

‘ஆம்; போக்கடித்து விட்டேன்.’

‘அப்படியா! எனக்கு ஒன்றும தெரியாதே! என்ன போக்கடித்து விட்டீர்?’

‘ஓ! இவ்விஷயம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று நான் எண்ணி-னேன். ஒரு முழுப் பொன் சவரன் காணமற் போய்விட்டது,’ என்று வருத்தத்தோடு கூறினர் அக் கணக்கப்-பிள்ளை.

இதைக் கேட்டதும் என் மனம் திடுக்கிட்டது; முகமும் மாறிவிட்டது. நான் வீடு பெருக்குவதை விட்டுக் கையில் துடைப்பத்தோடு நின்று கணக்கப்பிள்ளை சொல்லுவதைக் கருத்-துடன் கேட்டுக்கொண் டிருந்தேன்.

அப்போது என் எசமானர் மிக்க ஆச்சரியத்துடன், ‘ஒரு சவரனு போய்

விட்டது! ஐயோ பாவம்! எப்படிப் போய் விட்டது?' என்றார்.

அதற்கு அக் கணக்கப் பிள்ளை, நேற்று நான் அதிகாலையில் கழனிக்குச் சென்றேன். அது அந்த வழியிலே தான் விழுந்திருக்கவேண்டும்' என்றார்.

அப்படியானால் அங்கே சென்று நீர் தேடவேண்டாமா?' என்றார் என் எசமானர்.

நான் அவ்விதமே தேடினேன். அது அங்கே இருந்தால் தானே அகப்படும்! அதற்குள் யாரோ எடுத்துக் கொண்டார்கள். அதனால் நேற்று இரவெல்லாம் எனக்குத் தூக்கம் இல்லை,' என்று கணக்கப்பிள்ளை வருத்தத்துடன் கூறினார்.

## 10

"பிள்ளைகளே, அப்போது என் மனம் மிகவும் இளகிவிட்டது. அந்தப்

பொன் நாணயத்தின் மேல் இருந்த ஆசையும் போய்விட்டது. நான் அதை அப்போதே அவருக்குக் கொடுத்து விட வேண்டும் என எண்ணினேன். ஆனால் அவ்விதம் நான் கொடுத்தால் 'அடே திருட்டுப் பயலே, இவ்வளவு நேரம் நீ அதைக் கொடுக்காமல் வைத்திருந்தாயே!' என்று என் எசமானர் கோபிப்பாரே என வருந்தினேன்.

நான் இவ்விதம் யோசித்துக் கொண்டு இருக்கும்போது என் எசமானர் கணக்கப் பிள்ளையை நோக்கி, 'ஐயா, நீர் இந்த விஷயத்தை உடனே போலீசில் தெரிவித்தீரா?' என்றார்.

அப்போது கணக்கப் பிள்ளை, 'இன்னும் இல்லை' என்றார்.

'ஏன் தெரிவிக்கவில்லை? நேற்று இங்கு ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர்

வந்திருந்தாரே! அவரிடம் இதைச் சொல்லி இருக்கலாமே?' என்றார் என் எசமானர்.

பிள்ளைகளே, இதைக் கேட்டதும் எனக்கு மிகவும் அச்சம் உண்டாயிற்று; முகம் வெளுத்தது; பேசுதற்கும் முடியவில்லை. நான் என் பொன் நாணயத்தைத் துணியினின்றும் அவிழ்த்துக் கையில் வைத்துக் கொண்டேன். அடிமேல் அடிவைத்து மெதுவாகக் கணக்கப் பிள்ளையிடம் சென்றேன். அப்போது என் கண்களில் நீர் வடிந்தது. நான் மிகவும் மெலிந்த குரலோடு, 'ஐயா, இதோ — அந்தப் பொன் நாணயம்,' என்று சொல்லிக்கொண்டு என் கையைச் சிறிது நீட்டினேன். ஆனால் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. நான் சொல்வதும் அவர்கள் காதில் விழவில்லை.

அப்போது கணக்கப்பிள்ளை என் எசமானரைப் பார்த்து, 'ஐயா, அந்தப் போலீஸாரால் என்ன முடியும்? போனது வரப்போகின்றதோ!' என்று வருத்தத்தோடு சொன்னார்.



அது கேட்டு என் எசமானர், 'போம்—ஐயா, போம்; உமக்கு என்ன தெரியும்? இதோ நான் போலீசில் தெரிவிக்கின்றேன்,' என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

என் எசமானர் அவ்விதம் சொன்னவுடனே என் கைகளும் கால்களும் நடுங்கின. நான் 'ஓ' வென்று கூச்சலிட்டுத் தரையில் விழுந்தேன்; பிறகு எழுந்து என் எசமானர் அருகே சென்று அவர் காலில் விழுந்தேன்; 'ஐயா, என்னைக் காப்பாற்றவேண்டும்—காப்பாற்றவேண்டும்,' என்று கதறினேன்.

அப்போது என் எசமானர், 'என்ன சங்கதி? உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? சீக்கிரம் சொல்?' என்றார். அதற்கு நான், 'ஐயா, என்னை மன்னிக்கவேண்டும் — மன்னிக்கவேண்டும்' என்று கூவி அழ ஆரம்பித்தேன்.

அப்போது அவர், 'என்னடா இழவாய் இருக்கிறது! நடந்த விஷயத்தைக் கூறினால் தானே? எதை மன்-

விரும்பியதை வாங்கித் தின்னலாம்,' என்றார்.

அப்போது எனக்கு அளவில்லாத சந்தோஷம் உண்டாயிற்று. உடனே நான் கடைக்கு விரைந்து சென்றேன்; எனக்கு விருப்பமான தின்பண்டங்களையெல்லாம் வாங்கிக்கொண்டேன்; என் நண்பர்களுக்குக் கொடுத்து நானும் தின்றேன். ஆ! அன்று நான் அடைந்த சந்தோஷம் என்றும் அடைந்ததில்லை.

பிள்ளைகளே, என் எசமானர் அன்று முதல் என்மேல் மிகவும் அன்பாக இருந்தார். அதிக விலை உயர்ந்த பொருள்களையும் அவர் என்னிடம் கொடுத்து வைப்பார். நானும் அவரிடம் மிகவும் உண்மையாய் நடந்து வந்தேன்.

னிப்பது? நீ என்ன பிழை செய்துவிட்டாய்?' என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

## 11

" பிறகு நான் மெதுவாக எழுந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டே, 'எசமானரே, அந்தப் பொன் நாணயம் இதோ இருக்கின்றது. நான் இதை நேற்றுக் காலையில் வழியிலே கண்டெடுத்தேன் — என் பிழையை மன்னிக்க வேண்டும் — மன்னிக்க வேண்டும்,' என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் தரையில் விழுந்து அவர் காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

என் எசமானர் அப்போது, 'அடே குப்பா, எழுந்திரு; நீ சிறிதும் அஞ்சவேண்டாம்; உன்மேல் ஒன்றும் குற்றம்

இல்லை,' என்று சொல்லி என்னைத் தட்டிக் கொடுத்தார்.

ஆதலால் நான் மெதுவாக எழுந்து தலை குனிந்து நின்றேன். பிறகு நான் கணக்குப் பிள்ளையிடம் அந்தப் பொன் நாணயத்தைக் கொடுத்தேன். அவர், 'ஆம்; நான் போக்கடித்த பொன் நாணயம் இதுதான்—இதுதான்' என்று சொல்லிக்கொண்டே அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு அவர் என்னை அருகே அழைத்து என் முதுகில் தட்டிக் கொடுத்து, ஒரு சிறிய வெள்ளி நாணயத்தை என்னிடம் கொடுக்க வந்தார். நான் அப்போது மிக்க கூச்சத்துடன் என் எசமானர் முகத்தை நோக்கினேன். உடனே அவர், 'குப்பா, அதைப் பெற்றுக்கொள்; அந்த இரண்டணா உனக்கு இனாம் ஆகும். கடைக்குச் சென்று நீ

நான் பெரியவனுன பிறகு அவர் எனக்குக் கலியாணமும் செய்து வைத்-



தார். நானும் என் மனைவியும் அவ்ர் வீட்டிலேயே இருந்து காலங்கழித்து வந்தோம்.

இவ்விதம் சில வருஷங்கள் சென்றன. பிறகு என் எசமானர் சில நாள் நோயினால் வருந்தினார். அவருக்கு மனைவி, மக்கள் ஒருவரும் இல்லை. ஆதலால் நானும் என் மனைவியுமே அவரை அன்புடன் பாதுகாத்து வந்தோம்.

என் எசமானருக்கு என் மீது நாளுக்கு நாள் அன்பு அதிகரித்துவந்தது. ஆதலால் அவர், தம்முடைய ஆஸ்தியில் பெரும் பாகத்தை எனக்கே எழுதி வைத்துவிட்டார். பிள்ளைகளே, நான் வசிக்கும் இவ்வீடும் மற்றுமுள்ள நிலம், தோட்டம் முதலியவைகளும் அவருக்குச் சொந்தமானவைகளே.''

இவ்விதம் குப்புசாமிப் பிள்ளை 'தம் கதையைச் சொல்லி முடித்தார்.

அப்போது ஒரு சிறுவன், "தாதா தாதா, நீங்கள் இந்த வயதிலே மாடு போய்த்திரீகள்!" என்று சொல்லிக் கை கொட்டிச் சிரித்தான்.



வேறு ஒருவன், "தாதா, நீங்கள் ஒளிந்துகொண்டிருந்த புதல் எங்கே?" என்றான்.

குப்புசாமிப் பிள்ளை அவர்களுக்குத் தக்கபடி பதில் கூறி அவர்களை மகிழ்வித்தனர்.

இவ்விதம் சிறிது நேரம் அச்சிறுவர்கள் வேடிக்கையாகப் பல பேசினர்கள். பிறகு அவர்கள் ‘ஓ’ வென்று கூவிக்கொண்டும் குதித்துக்கொண்டும் தம் தம் வீடுகளுக்கு விரைந்து சென்றார்கள். அன்று இரவு தூங்கும்பொழுதும் அவர்கள் அப் பொன் நாணயத்தைப் பற்றியே கனவு கண்டு கொண்டு இருந்தார்கள்.

குப்புசாமிப் பிள்ளை அச் சிறுவர்களுக்கு இவ்விதமே பல கதைகளும், சரித்திரங்களும் சொல்லிக்கொண்டு வந்தார். அதனல் அச் சிறுவர்கள் கல்வி அறிவும், உலக அனுபவமும் எளிதிலே பெற்றுப் பலரும் புகழ்ந்து பேசும்படி வாழ்ந்து வந்தார்கள்.